உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 29.08.2026 • மலர் 04 • இதழ்: 241 • சனி • Edition : Nagercoil • 29.08.2026 • Vol : 04 • Issue : 241 • Page : 4 • Rs. 5/-

# "நேபாள வெள்ளப் பெருக்கு பிரச்சினைக்கு அதி முக்கியத்துவம்"

## வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தகவல்



புதுடெல்லி: நேபாளத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்பு பிரச்சினைக்கு அதி முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சீனாவின்திபெத்தை ஒட்டிய நேபாளத்தின் ரசுவா மாவட்டத்தில் உள்ள போட்டே கோஷி ஆற்றில்கடந்த புதன்கிழமை ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கு காரணமாக அப்பகுதியில் இருந்த வீடுகள், கடைகள், விடுதிகள், அரசு கட்டிடங்கள், பாலங்கள் என பல்வேறு கட்டிடங்கள்அடித்துச்செல்லப்பட்டன.

மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடியபோதிலும், சீறிப்பாய்ந்த வெள்ளத்தில் பலர் அடித்துச் செல்லப்பட்டனர். வீடுகளுக்குள் இருந்தவர்களும் வீட்டோடு அடித்துச் செல்லப்பட்டனர். இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி இது வரை 469 பேர் உயிரிழந்துள்ளனர். 600க்கும் மேற்பட்டோரை தேடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த வெள்ளப் பெருக்கில் இந்தியர்கள் பலரும் சிக்கி உள்ளனர். அவர்களை கண்டறியும் பணிகளை இந்திய வெளியுறவுத்துறைதொடர்ந்து கண்காணித்து வருகிறது. மேலும், வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்துக்கு இந்தியா இதுவரை இரண்டு விமானங்கள் மூலம் நிவாரணப் பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.

இந்நிலையில், நேபாள வெள்ள பாதிப்பு தொடர்பாக வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தலைமையில்

ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. டெல்லியில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், வெளியுறவுத் துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி, வெளியுறவுத் துறைசெய்தித்தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால், நேபாளத்துக்கான இந்திய தூதர் நவீன் ஸ்ரீவஸ்தவா, சீனாவுக்கான இந்திய தூதர் விக்ரம் துரைசாமி, வெளியுறவுத் துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆலோசனை குறித்து ஜெய்சங்கர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "நேபாளத்தில் தற்போது நடைபெற்று வரும் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து இன்று விவாதிக்கப்பட்டது. காத்மாண்டு மற்றும் பீஜிங்கில் உள்ள நமது தூதரகங்கள், அங்குள்ள இந்தியக் குடிமக்களின் நிலை மற்றும் நல்வாழ்வு குறித்த தகவல்களை வழங்கியுள்ளன.

நேபாளத்துக்கு அனுப்பப்படவுள்ள கூடுதல் நிவாரணப் பொருட்கள் குறித்து வெளியுறவு அமைச்சகத்தின் தொடர்புடைய பிரிவுகள் எங்களுக்குத் தெரிவித்தன. இப்பிரச்சினைக்கு நாங்கள் அதி முக்கியத்துவம் அளித்து வருகிறோம்" எனதெரிவித்துள்ளார்.

நேபாள சுற்றுலா வாரியத்தின் தகவலின்படி, 117 சுற்றுலாப் பயணிகள் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் 85 பேர் இந்தியர்கள், 16 பேர் சீனாவை சேர்ந்தவர்கள், 9 பேர் தென் கொரியாவைச் சேர்ந்தவர்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த இருவர், இத்தாலியைச் சேர்ந்த இருவர், அடையாளம் தெரியாத மூவர் ஆகியோர் இந்த எண்ணிக்கையில் அடங்குவர்.

நேபாளத்தில் மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், சோச்சென் கோலா மற்றும் புரேபு சாங்போ ஆறுகள் சங்கமிக்கும் இடத்திற்கு அருகில் உருவான பெரிய தடுப்பு ஏரி (வெள்ளிக்கிழமை) உடைந்துவிட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் மீண்டும் புதிய வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

## முன்னாள் எம்பி வசந்தகுமாரின் 6 வது நினைவு தினம் அனுசரிப்பு

### நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை



தென்தாமரைகுளம், ஆக. 29

வசந்த அன் கோ நிறுவனரும் கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதி முன்னாள் &றுப்பினருமான எச்.வசந்தகுமாரின் 6 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அகஸ்தீஸ்வரத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் அவரது குடும்பத்தினர் மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் நேற்று மலரஞ்சலி செலுத்தினர்.

இதையொட்டி நேற்று காலை அகஸ்தீஸ்வரத்தில் உள்ள நினைவிடத்திலும், அவரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவசிலைக்கும் அவரது மனைவி தமிழ்ச்செல்வி வசந்தகுமார், மகன் விஜய்வசந்த் எம்பி, மகள் ,தங்க மலர் ஜெகநாத் ,மகன் வினோத் குமார் ,மைத்துனர் எம். எஸ். காமராஜ் ,மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் லாரன்ஸ், நாகர்கோவில் மாநகர காங்கிரஸ் தலைவர் சிவபிரபு, மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜார்ஜ் ராபின் சன், மாமன்ற உறுப்பினர்கள்நவீன்குமார், அனுஷா பிரைட், முன்னாள் மாவட்ட தலைவர் ராதா கிருஷ்ணன் உட்பட கட்சி நிர்வாகிகள் மலர் அஞ்லி செலுத்தினர். அதனை தொடர்ந்து சமபந்தி விருந்து நடைபெற்றது.

## பட்டப்பகலில் வீட்டின் பூட்டை உடைத்து 36 சவரன் தங்க நகை கொள்ளை



வேலூர் ஆக:29

வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த கிறிஸ்டியான்பேட்டை பகுதியில் வசித்து வருபவர்ஓய்வுபெற்றதலைமை ஆசிரியை மரியா அவருடைய கணவர் ராஜ்குமார் நேற்று காலையில் இருவரும் ஆற்காடு பகுதியில் உள்ளஉறவினர்வீட்டுக்கு சென்று விட்டு மீண்டும் இரவு வந்து பார்த்தபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்துள்ளது

இதைக்கண்ட அதிர்ச்சி அடைந்துஉள்ளேசென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டிருந்த 36 சவரன் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்உ

டனடியாக காட்பாடி காவல் நிலையத்திற்கு தகவல் அளித்து தகவல் அடிப்படையில் இரவு மற்றும் தற்போதும் சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறையினர் கை ரேகை நிபுணர்களை வைத்து ஆய்வு செய்து

மேலும் வீட்டின் அருகே உள்ள சிசிடிவி காட்சிகளில் கொள்ளையர்கள் பதிவாகி உள்ளனரா எனவும் சோதனை செய்து வருகின்றனர்.

காட்பாடி காவல் துறையினர் இந்த சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

பட்டப் பகலில் வீட்டின்பூட்டைஉடைத்து 36 சவரன் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் இப்பகுதியில் பொது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது



## சென்னை புழல் சிறையில் முதல்வர் விஜய் திடீர் ஆய்வு

சென்னை: சென்னை செங்குன்றம் அருகே புழல் மத்திய சிறையில் முதல்வர் விஜய் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

முதல்வர் விஜய் பதவியேற்றது முதல், அவ்வப்போது பல்வேறு அரசு கட்டிடங்கள், விடுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இதன் தொடர்ச்சியாக, சென்னை செங்குன்றம் அருகே புழல் மத்திய சிறையில் முதல்வர் விஜய் திடீர் ஆய்வு மேற்கொண்டார். சுமார் ஒரு மணி நேரம் ஆய்வு செய்ததைத் தொடர்ந்து, M3 காவல் நிலையத்திலும் திடீர் ஆய்வு மேற்கொண்டார். பின்னர், காவல் நிலைய ஆவணங்கள் மற்றும் கோப்புகளை ஆய்வு செய்தார்.

இதனிடையே, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலை, வசதிகள் தொடர்பாக நேரில் சென்று முதல்வர் திடீர் விஜய் ஆய்வு மேற்கொண்டார். மேலும், சென்னை சிறையில் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, உணவு தயாரிக்கப்படும் கூடம், மருத்துவ வசதிகள் என அனைத்தையும் முதல்வர் நேரில் ஆய்வு நடத்தினார். முன்னதாக, மெட்ரோ, திருவள்ளூர் சிப்காட், பெரம்பூர் பேருந்து நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் முதல்வர் நேரில் ஆய்வு மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

## பளுகல் அருகே அண்ணன் மது குடிக்க பைக்கை எடுத்து சென்றதால் தங்கை தூக்கு போட்டு தற்கொலை

மார்த்தாண்டம், ஆக.29

மார்த்தாண்டத்தை அடுத்த பளுகல் பகுதி ராமவர்மன்சிறை என்ற இடத்தை சேர்ந்தவர் ராஜேந்திரன் (55). கூலித் தொழிலாளி. இவருக்கு மனைவி, ஒரு மகன், இரண்டு மகள்கள் இருந்தனர்.

இளைய மகள் ராஜலட்சுமி (26) என்பவர் திருமணமாகாமல் வீட்டில் இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் மகன் ராஜு என்பவருக்கு மது குடிக்கும் பழக்கம் உள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் அவர் மது குடிக்க செல்ல ராஜலட்சுமியின் பைக்கை அடிக்கடி எடுத்துச் செல்வதாக தெரிகிறது. இதனால் ராஜலட்சுமி அண்ணனிடம் தனது பைக்கை எடுத்துச் செல்லக்கூடாது என்று கூறினார். இதனால் அவர்களுக்குள் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது.

சம்பவ தினம் மீண்டும் ராஜு பைக்கை எடுத்துக்கொண்டு வெளியில் சென்றுள்ளார். இதனை அறிந்த ராஜலட்சுமி அன்று சாப்பிடாமல் இருந்துள்ளார். பின்னர்தனது அறையில் சென்று கதவை பூட்டிக் கொண்டார். சிறிது நேரங்கழித்து தந்தை ராஜேந்திரன் மற்றும் குடும்பத்தினர் கதவை தட்டியும் நீண்ட நேரம் கதவு திறக்காததால் அதிர்ச்சி அடைந்து கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்த்தனர்.

அப்போது அங்கு மின்விசிறியில் துப்பட்டாவால் ராஜலட்சுமி தூக்கிட்டு தொங்கிகொண்டிருப்பதை கண்டு அலறினார்கள். பின்னர் அவர்கள் அவரை மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ராஜலட்சுமி ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார். இது குறித்த புகாரின் பேரில் பளு கல் போலீசார் இளம் பெண்ணின் உடலை மீட்டு பிரேத பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஸ்ரீ நாராயண குரு ஜெயந்தி விழா ஜோதி ஓட்டம் மருந்துவாழ் மலையிலிருந்து தொடங்கியது

### திரளான மக்கள் பங்கேற்பு



நாகர்கோவில், ஆக.29

நாகர்கோவிலில் நடந்த ஸ்ரீநாராயணகுருஜெயந்தி ஓட்டம் பொதுக்கூட்டத்தில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.

ஸ்ரீ நாராயண குருவின் 172வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு காலை 6 மணிக்கு மருந்துவாழ் மலை சதய பூஜை சங்க வளாகத்தில் இருந்து ஸ்ரீ நாராயண குரு ஜோதி தொடர் ஓட்டும் புறப்பட்டது.

இந்த தொடர் ஓட்டத்தை கன்னியாகுமரி துணை போலீஸ் சூப்பிரண்டு பிரகாஷ் தொடங்கி வைத்தார். அங்கிருந்து தொடங்கிய ஓட்டமானது ஈத்தங்காடு, வழுக்கம்பாறை, சுசீந்திரம் வழியாக கோட்டாறு நாராயண குரு மணி மண்டபத்தை வந்தடைந்தது. ஜோதியை ராஜப்பா பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து காலை 8 15 மணிக்கு மணிமண்டபத்தில் பூஜை நடந்தது. பின்னர் நாராயண குரு திருமண மண்டபத்தில் சிறப்பு பூஜைகளும் அதனை தொடர்ந்து பொதுக்கூட்டம் நடந்தது. குழு தலைவர் நாகராஜன் தலைமை தாங்கினார். நாராயண குரு மெட்ரிக் பள்ளி துணை முதல்வர் அவ்வை சிதம்பரம் அறிமுக உரையாற்றினார். தொடர்ந்து கட்டுரை மற்றும் ஓவிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பெண்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. நாராயண குரு ஜெயந்தி விழாவை ஒட்டி நேற்று குமரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டு இருந்தது.

# நீர்நிலைகளை ஆக்கிரமிப்பதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு;மீட்டுத் தரவும் கோரிக்கை



சிவகங்கை ஆக 28, , காரைக்குடி வட்டத்துக்கு உட்பட்டது மித்ரா வயல் என்ற பகுதி, இப்பகுதியில் தனிநபர் ஒருவர் நீர் நிலைகளை ஆக்கிரமிப்பு செய்து கட்டுமான பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், இதனால் மழைநீர் வீடுகளுக்குள் புகும் நிலை ஏற்படுவது உடன் அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கும் என குற்றம் சாட்டும் பொதுமக்கள், தங்களின் வாழ்வாதாரமாக இருந்து வரும் விவசாயமும் பாதிக்கும் என வேதனையோடு தெரிவிக்கின்றனர், இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டால், அங்கிருக்கும் மயான கரைக்கு செல்வது கூட கேள்விக்குறையாகிவிடும் என வேதனையோடு தெரிவிக்கும் பொது மக்கள், அரசு அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து , தங்களின் வாழ்வாதாரத்தை காக்கவேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

# விளாத்திகுளம் ஸ்ரீ ஷீரடி சாய்பாபா திருக்கோவிலில் சிறப்பு ஆராதனை; ஏராளமான பெண் பக்தர்கள் வழிபாடு



விளாத்திகுளம் ஆகஸ்ட் 29

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வசந்தம் நகரில் அமைந்துள்ள ஸ்ரீ ஷீரடி சாய்பாபா திருக்கோவிலில் சாய் பாபாவிற்கு சிறப்பு ஆராதனைகள்நடைபெற்றது. இதில் விளாத்திகுளம் மற்றும் சுற்றுவட்டாரபகுதிகளை சேர்ந்த ஏராளமானபெண்கள்கலந்து கொண்டு முன்னதாக ஸ்ரீ சீரடி சாய் பாபா அவர்களுடைய முழு உருவ சிலைக்கு வண்ண மலர்கள் சாற்றப்பட்டு பஜனைபாடல்கள்பாடப்பட்டு குத்து விளக்கு ஏற்றி பூ, பழம் உள்ளிட்டவற்றைக் கொண்டு பூஜைகள் செய்துதீபாரதனைகாட்டி சாய்பாபாவை மனம் உருகி தரிசனம் செய்தனர். இந்நிகழ்வை முன்னிட்டு பாபாவிற்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு மலர்களால் நன்கு அலங்காரம் செய்யப்பட்டிருந்து. இதை தொடர்ந்து நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனையில் பாபாவின் பாடல்களை பாடியவாறு கோவிலில் நடைபெற்ற ஆர்த்தியை கண்குளிர கண்டு தரிசித்தனர். பின்னர் கோவிலுக்கு வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் பாபாவின் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு உணவு அருந்தி சாய்பாபாவின் அருள் பெற்றுச் சென்றனர்.

# சென்னை பெசன்ட் நகர் திருத்தலத்தின் 54 வது ஆண்டுத் திருவிழா



சென்னை, ஆக 29,

பெசன்ட் நகர் திருத்தலத்தின் 54 வது ஆண்டுத் திருவிழா ஆகஸ்டு மாதம் 29ஆம் தேதி முதல் செப்டம்பர்மாதம் 8 ஆம் தேதி வரை 11 நாட்கள் "அமைதி" அல்லது சமாதானம் எனும் மையக்கருத்தில் கொண்டாடப்படுகிறது.

இது குறித்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், திருத்தல அதிபர் மற்றும் பங்குத்தந்தை அருளப்பா தெரிவித்ததாவது: ஆகஸ்ட் 29 சனிக்கிழமை திருத்தல ஆலயத்திற்கு முன் அமைந்துள்ள 75 அடி உயரமுள்ள கொடிமரத்தில் 12 அடி நீளமுள்ள திருக்கொடி ஏற்றப்பட்டு, ஆண்டுத் திருவிழா முறைப்படி தொடங்கி, அலங்கரிக்கப்பட்ட கொடியும், அன்னையின் தேரும், அருகில் உள்ள வீதிகளில் பவனியாக வந்து மாலை 5.45 மணிக்கு அன்னையின் உருவம் பதிந்துள்ள திருக்கொடி சென்னை மயிலை உயர்மறைமாவட்டப் பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி கரங்களில் புனிதம் செய்யப்பட்டு ஏற்றப்படும் . இதற்குப் பிறகு ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி நடைபெறும். மேலும் . பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை வசதி, கோயம்பேடு, தாம்பரம், மற்றும் சென்னை முக்கிய வழித்தடங்களில் இருந்து சிறப்பு பேருந்து சேவை, மருத்துவ முகாம்கள் , தூய்மை பணிகள், காவல்துறை பாதுகாப்பு, சி.சி.டி.வி கட்டுப்பாட்டு அறை, குழந்தைகள் பாதுகாப்பு , போக்குவரத்து மாற்றங்கள் , வாகன கட்டுப்பாடு , வாகனங்களை நிறுத்துமிடம் என அனைத்து நிலைகளிலும் அடிப்படை வசதிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

# ஈரோட்டில் 'இளம் இந்தியர்கள் நாடாளுமன்றம் 2026' மண்டலப் போட்டி தொடங்கியது




ஈரோடு ஆகஸ்ட் 29 இந்தியத் தொழில் கூட்டமைப்பின்(CII)அங்கமான 'யங் இந்தியன்ஸ்' (Yi) ஈரோடு கிளையின் சார்பில், 'தளிர்கள்' (Thalir) அமைப்பின் இணைப்பில் 'இளம் இந்தியர்கள் நாடாளுமன்றம் 2026' (Young Indians Parliament 2026) தெற்கு மண்டலப் போட்டி நேற்று தொடங்கியது.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆகஸ்ட் 28 (நேற்று) மற்றும் 29 () ஆகிய இரு தினங்கள் நடைபெறும் இப்போட்டியில், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த திரளான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்பு, ஜனநாயக நெறிமுறைகள், நாடாளுமன்ற விவாத முறைகள் மற்றும் பொதுப் பேச்சாற்றலை வளர்க்கும் நோக்கில் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

JKKN கல்வி நிறுவனங்களின் அனுசரணையில் நடைபெறும் இப்போட்டியில், மாணவர்கள் பல்வேறு பொதுநலத் தலைப்புகளில் தங்களது விவாதங்களையும் கருத்துகளையும் முன்வைத்து தீவிரமாகப் பங்கேற்று வருகின்றனர்.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக கூட்டரங்கில் மாவட்ட தொழில் மையம் சார்பில், மாவட்ட ஏற்றுமதி மேம்பாட்டுப் குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.விஷு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



# சேலத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தீவிரம்

## மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு

சேலம் ஆக 29 மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனரின் அறிவுறுத்தலின்படி சேலம் மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் இரண்டு கட்டங்களாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக வீடுகளின் பட்டியல்மற்றும்வீடுகளின் கணக்கெடுப்பு கடந்த 1.8.2026 முதல் தொடங்கி 30.8..2026 வரை நடைபெறுகிறது. இரண்டாம் கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி பிப்ரவரி மாதம் 2027 ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது. வீட்டு பட்டியல் மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பு பணிக்காக 4635 கணக்கெடுப்பாளர்களும், 808 மேற்பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டு அரசு வழங்கியுள்ள அடையாள அட்டையுடன் வீடுகளுக்கு நேரில் சென்று விவரங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அதன்படி சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டம் மாசி நாயக்கன் பட்டி ஊராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி நடைபெறுவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது மக்கள் தொகை கணக்கெடுப்பு நாட்டின் திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் முக்கிய பணியாகும் எனவே சேலம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பு முதல் கட்டப் பணிக்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு தருமாறும் , மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான மற்றும் உண்மையான தகவல்களை வழங்குமாறும் சேலம் மாவட்ட முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்/சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்தார்.

# கன்னியாகுமரி அருகே ஆக்கர் கடையில் மலை பாம்பு சிக்கியது



கன்னியாகுமரி, ஆக. 29

கன்னியாகுமரி அருகே கொட்டாரம் பகுதியை சேர்ந்தவர் செல்வகுமார். இவர் கொட்டாரம் காலேஜ் சாலையில் ஆக்கர் கடை நடத்தி வருகிறார். இந்த நிலையில் நேற்று காலை ஆக்கர்கடையில் சுமார் 10 அடி நீளம் உடைய மலைப் பாம்பு ஒன்று பதுங்கி இருப்பதை பார்த்த அப்பகுதி மக்கள் பேரூராட்சி கவுன்சிலர் வசந்த குமாரி என்பவருக்கு தகவல் தெரிவித்தனர்.

அவர் இது குறித்து உடனடியாக பூதப்பாண்டி வனச்சரக அதிகாரிக்கு தகவல் தெரிவித்தார். இதை அடுத்து வனத் துறையினர் சம்பவத்திற்கு விரைந்து சென்று ஆக்கர் கடையில் பதுங்கி இருந்த மாலை பாம்பை பிடித்தனர்.



# அன்னை தெரசா பிறந்த நாள்: பாசூரில் இலவச வேஷ்டி, சேலை நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

ஈரோடு ஆகஸ்ட் 29 அன்னை தெரசா அவர்களின் 116வது பிறந்த தினத்தை முன்னிட்டு, அன்னை தெரசா அறக்கட்டளைசார்பாக ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஈரோடு மாவட்டம் பாசூரில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு அன்னை தெரசா அறக்கட்டளையின் ஈரோடு மாவட்ட தலைவர் கனகராஜ் தலைமை தாங்கினார்.

மொடக்குறிச்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.எம்.பழனிச்சாமி சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு விழாவினைத் தொடங்கி வைத்து, அன்னை தெரசா அவர்களின் தியாகம் மற்றும் அளப்பரிய சமுதாயச் சேவைகள் குறித்துசிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில்காளிங்கராயன் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் வி.எம். வேலாயுதம், கொடுமுடி வட்டாரத் தலைவர் கோபாலகிருஷ்ணன், கொடுமுடி கவுன்சிலர் தம்பி, தபால் துறை அதிகாரி குமார், அறக்கட்டளையின் செயலாளர் ஸ்டாலின் மற்றும் அறக்கட்டளையை சேர்ந்த செல்வி ரவி ஆகிய முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து, மாவட்டத் தலைவர் கனகராஜ் மற்றும் துணைத் தலைவர் பாலமுருகன் ஆகியோரின் முன்னிலையில், பாசூர்பகுதியைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட பெண்களுக்கு இலவசச் சேலைகளும், 75க்கும் மேற்பட்ட ஆண்களுக்கு வேஷ்டி மற்றும் லுங்கிகளும் வழங்கப்பட்டன.

மேலும், அப்பகுதி பொதுமக்களுக்கு அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களும் நலத்திட்ட உதவிகளாக வழங்கப்பட்டன. இதனுடன் முன்னாள் ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் மக்கள்ராஜன் அப்பகுதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அமர்வதற்காக சுமார் 25 நாற்காலிகளை (சேர்கள்) வழங்கினார்.

அத்துடன் அன்னை தெரசா அறக்கட்டளையைச் சேர்ந்த செல்வி ரவி அப்பகுதி பொதுமக்களுக்கு25கிலோ எடை கொண்ட அரிசி மூட்டையை (அரிசி சிப்பம்) வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில் அன்னை தெரசா அறக்கட்டளையின் உறுப்பினர்கள் பாசூரை சேர்ந்த முத்துசாமி, சேகர், செல்வன், சுமதி உட்பட திரளான பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

# சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா விருது: மறைந்த தலைமை ஆசிரியர் மனைவிக்கு முதலமைச்சர் வழங்கிச் சிறப்பிப்பு




கடந்த 05.03.2025 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், எலுவப் பள்ளி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில், மதிய உணவு இடைவேளையின்போது, மூன்றாம் வகுப்புப் படிக்கும் 8 வயது சிறுவன் நிதின், பள்ளி வளாகத்திற்கு அருகில் அமைந்திருந்த விவசாயப் பண்ணைக் குட்டையில் தற்செயலாக வழுக்கி விழுந்தான். அச்சிறுவன் ஆபத்தான நிலையில் தத்தளித்து, நீரில் மிதக்கப் போராடுவதைக் கண்ட பள்ளி தலைமையாசிரியர் .பி.எஸ்.கௌரி சங்கர் ராஜா அச்சிறுவனைக் காப்பாற்ற அனைத்து முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், எதிர்பாராதவிதமாக இருவரும் உயிரிழந்ததையடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி இருவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். மறைந்த பள்ளி தலைமையாசிரியர் .பி.எஸ்.கௌரி சங்கர் ராஜா வீரதீரச் செயல், அசாதாரண துணிச்சல், உன்னத தியாகம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அவர் மரணத்திற்குப் பிந்தைய "சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா" விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டள்ள நிலையில், அவரது மனைவி .கொ.சிரிஷா அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வீரதீரச் செயலுக்கான ஒன்றிய அரசின் "சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா (மிகச் சிறந்த உயிர்ப் பாதுகாப்பு)" விருதிற்கான பதக்கம் மற்றும் சான்றிதழை 27.08.2026 அன்று வழங்கி சிறப்பித்தார்.

# திருப்பூர் குப்பை பிரச்னைக்கு அறிவியல் பூர்வ தீர்வு காண வேண்டும்

## போராடும் மக்களை கைது செய்யும் போலீசாருக்கு எம்.பி. சுப்பராயன் கண்டனம்



திருப்பூர் 'ஆக29 திருப்பூர் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் எம்பி சுப்பராயன் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிபிஐ, சிபிஎம், திமுக, காங்கிரஸ், பாஜக, கொமதேக மற்றும் முஸ்லிம் அமைப்புகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர். கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த எம்பி சுப்பராயன் கூறுகையில், வளர்ந்து வரும் தொழில் நகரமான திருப்பூரில் நாள்தோறும் சுமார் 630 முதல் 650 டன்கள் வரை குப்பைகளும், பனியன் மற்றும் அதனைச் சார்ந்த துணைத் தொழில்களின் கழிவுகளும் வீதிகளில் குன்று போல் தேங்கி வருகின்றன. இதனால் பொது மக்களுக்கு நுரையீரல் பாதிப்பு மற்றும் கடுமையான சுகாதாரக் கேடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குடியிருப்புப் பகுதிகளில் கொட்டப்படும் குப்பைகளால் வீசும் துர்நாற்றத்தை எதிர்த்து ஜனநாயக முறையில் குரல் கொடுக்கும் மக்கள் மீதும், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதும் காவல்துறையினர் அத்துமீறி முரட்டுத்தனமாக நடவடிக்கை எடுப்பது கண்டிக்கத்தக்கது. இத்தகைய அடக்குமுறைகளை உடனடியாகக்கைவிட வேண்டும். இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அறிவியல் பூர்வமான திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, அனைத்துக் கட்சிகள் சார்பில் கையெழுத்திடப்பட்ட விரிவான மனு முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இரு தினங்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து அடுத்தகட்டப் போராட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்...

# நல்லம்பள்ளி அருகே மக்கள் தொடர்பு திட்டம் முகாம்

## நலத்திட்ட உதவிகள் மாவட்ட ஆட்சியர் வழங்கினர்



தருமபுரி ஆகஸ்ட் 29 தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஊராட்சி ஏலகிரி கிராமத்தில் நடந்த மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 39 பயனாளிகளுக்கு ரூ.14 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார். இந்த முகாமில் வருவாய்த் துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, வேளாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆட்சியர் பேசியதாவது. ஏலகிரியில் நடக்கும் மக்கள் தொடர்பு திட்ட முகாமில், தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் அவற்றை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த கண்காட்சி அரங்குகள், விளக்க கையேடுகள் மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் வழங்கப்பட்டன. அரசு திட்டங்கள் குறித்த விளக்கத்தினை, இணையதளம் மூலமாகவோ, கிராமப்புற அலுவலகங்களின் மூலமாகவோ பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் தெரிந்து கொள்ளலாம். பொதுமக்கள் தங்களுடைய வாழ்வாதாரம் மேம்பட, தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை பற்றி அறிந்து கொண்டு விண்ணப்பித்து, தங்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கை தரத்தையும் உயர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆட்சியர் தெரிவித்தார். இந்த முகாமில், ஆர்டிஓ ஜார்ஜ், அரசு அலுவலர்கள் ஷெர்லி ஏஞ்சலா, கோவிந்தன், பழனிசாமி, மீனாட்சி சுந்தரம், முருகலட்சமி, சந்திரா, நல்லம்பள்ளி தாசில்தார் கற்பக வடிவு உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# புதிய தொழில் நுட்பங்களை மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் கல்வியாளர் ஜெயப்பிரகாஷ் அறிவுரை

ஈரோடு ஆக 29 ஈரோடு வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கல்வியாளர் ஜெயப்பிரகாஷ் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது சமூக வலைதளங்களில் மாணவர்கள் பதிவிடும் கருத்துகள், பகிரும் தகவல்கள் மற்றும் இணையவழி செயல்பாடுகள் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பை வழங்கும் நிறுவனங்களின் கவனத்துக்கு வரக்கூடும். எனவே சமூக வலைதளங்களை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும் . மாணவர்கள்எதிர்காலத்திற்குத் தயாராக இருப்பது மட்டும் போதாது. புரட்சிகரமான மாற்றங்களை எதிர்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும், தொடர்ந்து கற்றுக்கொள்ளுங்கள். புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளுங்கள். மாற்றங்களுக்கு ஏற்ப உங்களைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள் இவ்வாறு அவர் பேசினார். இதில் வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் சந்திரசேகர், அறக்கட்டளை உறுப்பினர் யுவராஜா, முதல்வர் முனைவர் ஜெயராமன் உள்ளிட்ட நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் துறைத் தலைவர் முனைவர் லதா ஜோதி வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சியின் நிறைவாக சைபர் செக்யூரிட்டி துறைத் தலைவர் முனைவர் கௌசிக் நன்றி கூறினார்.

# நிலத்தின் உட்பிரிவுகள் அனைத்தையும் இணைக்க விவசாயிகள் அடையாள எண் பெற வேண்டும்

## கலெக்டர் ரேவதி அறிவுறுத்தல்

தஞ்சாவூர் ஆகஸ்ட் 29 நிலத்தின் உட்பிரிவுகள் அனைத்தையும் இணைக்க விவசாயிகள் அடையாள எண் பெற வேண்டும் என தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர்ரேவதி அறிவுறுத்தினார்

இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப் பதாவது: வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு அடையாள அட்டை பதிவு செய்யும்பணி நடைபெற்று வருகிறது. நேரடி பட்டா உள்ள அனைத்து விவசாயிகளுக்கு ம் தங்கள் அருகில் உள்ள வேளாண் மை விரிவாக்கம் மையங்களில் விவசாயி அடையாள எண் பெறு வதற்கான செயலின் சாகுபடி விவரங்களை யில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே விவசாய அடையாள அட்டை எண் பதிவு செய்துள்ள ஒரு சில விவசாயிகள் தங்கள் நிலங்க ளில் ஒரு பட்டா மட்டுமே பதிவு செய்து அடையாள எண் பெற்றுள்ளனர் .உதாரணமாக ஒரு விவசாயிக்கு 3பட்டாக்கள் இருப் பின் அவர்கள் ஒரு பட்டாவில்உள்ளநிலத்தை மட்டும் பதிவு செய்து எண் பெற்றிருக்க இருக்கலாம். அவ்வாறு உள்ள விவசாயிகள்தங்களின்எஞ்சிய நிலங்களின் விவரங்களை வேளாண்மை துறை அலுவலர்கள் மூலம் பதிவு செய்து கொள்ள வேண்டும்

பதிவு செய்து வரும் விவசாயிகள் தங்கள் பெயரில் உள்ள அனைத்து பட்டாக்கள் ஆதரர் எண்ணுடன் இணைத்த செல்போன் எண்ஆகியவிவரங்களுடன் வேளாண்மை துறை அலுவலர் அணுக வேண்டும் இனி வரும் காலங்களில் பயிர்கடன்,உரம்வினியோகம் ஆகிய வை விவசாய அடையாள எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலங்களின் அடிப்படையில் மட்டுமே வழங்கப் பட உள்ளது

எனவே அனைத்து விவசாயிகள் தாங்கள் பெயரில் உள்ள நில விவரங்களை விவசாய அடையாள எண்ணில் பதிவு செய்ய வேண்டும் மேலும் விவசாயிகள் அடையாள எண் பெற்ற விவசாயிகள் நம்ம வயல் செயலி மூலம் தனது வயலி மின்னணு பயிர் கணக்கீட்டில் பதிவு செய்ய இயலும் .இந்த செயலியின் மூலம் விவசாயிகள் தங்களது செல்போன் மூலம் மின்னணு பயிர் கணக்கெடுப்பை தாங்களே மேற்கொள்ளலாம்

எனவே விவசாயிகள் அனைவரும் அடையாள எண் பெருவத்தோடு தங்களுடைய நிலத்தின் உட்பிரி வுகள் அனைத்தையும் விவசாய அடையாள எண்ணுடன் இணைந்திட தங்கள் பகுதியில் உள்ள இசேவை மையங்கள், வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்கள் மற்றும் தோட்டக் கலை உதவி இயக்குனர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம். மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டு ள்ளது.

# பொய்யான வழக்குகளைத் தடுக்க சட்டப் பாதுகாப்பு கோரி ஆலோசனைக் கூட்டம்



மதுரை, ஆக. 28:

PCR மற்றும் SC/ST சட்டங்களின் கீழ் உண்மைத் தன்மையற்ற வழக்குகள் பதிவு செய்யப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, பி.சி., எம்.பி.சி., டி.என்.டி. பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பில் மதுரையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மதுரை பாண்டி கோவில் அருகே உள்ள எஸ்.டி. மஹாலில் நடைபெற்ற இக்கூட்டத்தை பி.சி., எம்.பி.சி., டி.என்.டி. பாதுகாப்பு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்ஔவைதியாகராஜன் ஒருங்கிணைத்தார். முக்குலத்தோர் நல பாதுகாப்புப் பேரவையின் பொதுச் செயலாளர் நந்தகுமார் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு, PCR மற்றும் SC/ST சட்டங்களின் நடைமுறை தொடர்பான தங்களது கருத்துகள் மற்றும் கோரிக்கைகளை முன் வைத்தனர்.

கூட்டத்தில், PCR மற்றும் SC/ST சட்டங்களின் கீழ் உண்மைத்தன்மை இல்லாமல் வழக்குகள் பதிவு செய்யப்படுவதைத் தடுக்க வேண்டும் என்றும், இதனால் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்கள் பாதிக்கப்படாத வகையில் உரிய சட்டப் பாதுகாப்பை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்என்றும்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், உச்சநீதிமன்றத்தின் தொடர்புடைய தீர்ப்புகளில் தெரிவிக்கப் பட்டுள்ள சட்டக் கோட்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அரசை வலியுறுத்தப்பட்டது.

தமிழகத்தின்அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து ஆலோசனைக்கூட்டங்களைநடத்தவும், PCR மற்றும் SC/ST சட்டங்கள் தொடர்பான வழக்குகளில் சட்டரீதியான வழிகாட்டுதல்களை வழங்க தனி சட்ட ஆலோசகர் குழுவை அமைக்கவும்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் குறைகளை ஆய்வு செய்து, அவர்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தனி ஆய்வுக் குழுவை தமிழக அரசு அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, சட்டத்தின் முன் அனைவருக்கும் சமத்துவமான பாதுகாப்பும் நீதியும் கிடைக்க தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூட்டமைப்பின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தின் நிறைவில் மக்கள் தொடர்பாளர் போஸ் நன்றி கூறினார்.



வேலூர்மாவட்டம், காட்பாடிவட்டம், காங்கேயநல்லூரில் அமைந்துள்ளதிருமுருககிருபானந்த வாரியார் அவர்களின் ஞானத்திரு வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லீலா அலெக்ஸ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் .டி.எம்.கதிர் ஆனந்த், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், 1வது மண்டலக்குழுத் தலைவர் திருமதி புஷ்பலதா வன்னியராஜா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.பேச்சிமுத்து, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சரவணன், மாமன்ற உறுப்பினர் திரு.ரமேஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.

# ராஜாக்கமங்கலம் அருகே நள்ளிரவில் பைக்குகள் மோதல் வாலிபர் உயிரிழப்பு

## 4 பேர் படுகாயம்

நாகர்கோவில், ஆக. 29

நாகர்கோவில் நெசவாளர் காலனியை சேர்ந்தவர் அருள் மகன் கிஷோர் (26). இவர் கல்லூரி படிப்பை முடித்துவிட்டு கோட்டாறில் உள்ள உறவினர் கடையில் வேலை செய்து வந்துள்ளார். அடுத்த வாரம் வேலைக்காக பெங்களூர் செல்ல இருந்தார். இந்த நிலையில் கிஷோர் நேற்று முன் தினம் நள்ளிரவு தனது நண்பர்கள் 4 பேருடன் இரண்டு பைக்குகளில் கோணத்திற்கு சென்றனர். ஒரு பைக்கில் மூன்று பேரும், மற்றொரு பைக்கில் கிஷோர் உட்பட 2 பேர் சென்றுள்ளனர். இரண்டு பேர் சென்ற பைக்கை கிஷோர் ஓட்டி சென்றார்

அப்போது ராஜாக்கமங்கலம் அருகே சென்ற போது 3 பேர் சென்ற பைக்கை ஓட்டியவர் வலது புறமாக திருப்பினார். இதை எதிர்பாராத கிஷோர் சென்ற பைக் முன்னால் சென்ற பைக் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்த கிஷோர் இரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்

மற்ற நான்கு பேரும் கீழே விழுந்து படுகாயம் அடைந்து வலியால் துடித்தனர்.

இதை பார்த்த அந்த வழியாக சென்றவர்கள் ராஜகமங்கலம் போலீசருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவத்திற்கு விரைந்து சென்று படுகாயமடைந்த நண்



பர்கள் 4 பேரை மீட்டு சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பலியான கிஷோரின் உடலும் பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தருமபுரியில் உணவகங்களில் உணவு பாதுகாப்பு துறையினர் அதிரடி ஆய்வில் பழைய இறைச்சிகள் பறிமுதல்

தருமபுரி ஆகஸ்ட் 29 தருமபுரி மாவட்ட ஆட்சியரின் உத்தரவு மற்றும் ஊடகங்களில் வந்த செய்திகள் அடிப்படையிலும் தருமபுரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் கைலாஷ்குமார் மற்றும் தருமபுரி நகராட்சி மற்றும் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் உள்ளிட்ட குழுவினர் , தருமபுரி நேதாஜி பைபாஸ் சாலை, பென்னாகரம் ரோடு, ஓசூர் சேலம் புறவழி சாலை மற்றும் புதிய பேருந்து நிலையம் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள அசைவ உணவகங்களில், திடீர் ஆய்வு செய்தனர். ஆய்வின் போது மூன்று உணவகங்களில் இருந்து குளிர்பதன பெட்டியில் வைத்திருந்த சமைத்த பழைய தந்தூரி , சமைத்த கோழிஇறைச்சி, செயற்கை நிறமூட்டி பவுடர் கலந்த மசாலா தடவிய பச்சை இறைச்சிசுமார்பத்துகிலோ அளவிலானது பறிமுதல் செய்து அப்புறப்படுத்தி கிருமிநாசினி (பினாயில்) ஊற்றி அழிக்கப்பட்டது. மேலும் ஒரு சில உணவகங்களில் இருந்து செயற்கை நிறமூட்டி பவுடர்கள்,



காலாவதியான பால் பாக்கெட்கள், பன்னீர் மற்றும் செயற்கை நிறம் ஏற்றப்பட்ட சோம்பு உள்ளிட்டவை பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்டது. இன்றைய தினம் சுமார் 15 க்கும் மேற்பட்ட உணவகங்களின்ஆய்வில்சமைத்த தந்தூரி இறைச்சிகள் குளிர்பதன் பெட்டியில் வைத்திருந்த உணவகங்கள், செயற்கை நிறமேற்றிகள் அதிகம் சேர்க்கப்பட்ட இறைச்சி பறிமுதல் செய்யப்பட்ட ஒரு உணவகம், காலாவதியான பால் மற்றும் செயற்கை நிறம் ஏற்றப்பட்ட சோம்பு பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்ட உணவகங்கள் ஐந்து கடை உரிமையாளர்களுக்கு உடனடி அபராதம் ரூபாய்.2,000 வீதம் மூன்று உணவகங்களுக்கும் , ஆயிரம் ரூபாய் (1000) வீதம் இரண்டு உணவகங்கள் என மொத்தம் ஐந்து உணவகங்களுக்கு சுமார் ரூ.8,000 உடனடி அபராதம் விதித்து எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கி இனி மேற்படி தவறுகள் காணும் பட்சத்தில் சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் சில்லி சிக்கன், இஞ்சி பூண்டு பேஸ்ட் மற்றும் உபயோகப்படுத்தும் சில்லி மசாலா பவுடர் பகுப்பாய்வுக்கு எடுத்துச் செல்லப் பட்டது. ஆய்வறிக்கை அடிப்படையில் உரிய நடவடிக்கை அக்கடை உரிமையாளர் மீது எடுக்கப்படும் என உணவு பாதுகாப்புத்துறையினர் தெரிவித்தனர். தொடர்ச்சியாக மாவட்ட முழுவதும் ஆய்வுகள் நடைபெறும் என நியமன அலுவலர் தெரிவித்தார்.

# கன்னியாகுமரியில் கடல் நீர்மட்டம் தாழ்வு சுற்றுலா படகு போக்குவரத்து ரத்து

கன்னியாகுமரி,ஆக.29 சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்வார்கள். பின்னர் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை ஆகியவற்றை படகில் சென்று பார்த்துவிட்டு திரும்புவது வழக்கம்.

இதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடைவேளையின்றி படகுகளை இயக்கி வருகிறது.

நேற்று வழக்கம் போல் காலை 8 மணிக்கு தொடங்க வேண்டிய படகு சேவை கடல் நீர் மட்டம் தாழ்வு காரணமாக தொடங்கவில்லை. தொடர்ந்து காலை 10 மணியளவில் கடல் சகஜ நிலைக்கு திரும்பியதைத் தொடர்ந்து படகு சேவை தொடங்கியது. பின்னர் 11 மணிக்கு மீண்டும் கடலில் நீர்மட்டம் தாழ்வு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து படகு சேவை நாள் முழுவதும் ரத்து செய்யப்பட்டது.

படகுத் துறையில் காத்திருந்த சுற்றுலா பயணிகள் விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலையை சென்று பார்க்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பினர்.



# கொலம்பியா பல்கலைக்கழகத்துடன் இரட்டை பட்டப்படிப்பு: விஐடி புரிந்துணர்வு ஒப்பந்தம்

வேலூர், ஆக. 29: அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்துடன் இரட்டை பட்டப்படிப்பு வழங்குவதற்காக விஐடி பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய துணைத்தூதர்பினாய ஸ்ரீகாந்த பிரதான் தலைமையில், விஐடி வேந்தர் கோ. விசுவநாதன் மற்றும் கொலம்பியா பல்கலைக் கழகத்தின் கல்வி விவகாரங்கள் மற்றும் உலகளாவிய ஒருங்கிணைப்பு துறை டீன் செனட்டர் சுலைமன் கச்சானி ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் கொலம்பியா பல்கலைக்கழகத்துடன் இரட்டை பட்டப்படிப்பு திட்டத்தை மேற்கொள்ளும் ★★முதல் இந்தியப் பல்கலைக்கழகம் என்ற சிறப்பை விஐடி பெற்றுள்ளதாக★★ தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து விஐடி நிறுவனரும் வேந்தருமான கோ. விசுவநாதன் கூறியதாவது:

“உலகத் தரத்திற்கேற்ப கல்வி வழங்குவதில் விஐடியின் உறுதியான அர்ப்பணிப்பை இந்த ஒப்பந்தம் பிரதிபலிக்கிறது. விஐடி மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகத்துக்கு இடையிலான இந்த ஒப்பந்தம் ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

உலகின் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்றான கொலம்பியா பல்கலைக்கழகத்துடன் இரட்டை பட்டப்படிப்பு திட்டத்தை வழங்கும் முதல் இந்தியப் பல்கலைக்கழகம் என்ற சிறப்பைப் பெறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். மாணவர்களுக்கு சர்வதேச அளவிலான கற்றல் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான விஐடியின் தொடர் முயற்சிக்கு இது மேலும் வலுசேர்க்கும்” என்றார்.

நிகழ்ச்சியில் விஐடி துணைத் தலைவர் ஜி.வி. செல்வம், சர்வதேச உறவுகள் இயக்குநர் ஆர். சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



ராமநாதபுரம் மாவட்டம் அருகே ரெகுநாதபுரம் ஸ்ரீ வல்லபை ஐயப்பன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜை நிகழ்வில் தலைமை குருசாமி மோகன் தலைமையில் ஶ்ரீவல்லபை மஞ்சமாதாவுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. மஞ்சமாதா சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

# இந்தியாவில் உலகளவில் முதன்முறையாக அறிமுகமாகும் யமாஹா



சென்னை, ஆக 29,

இந்தியாவில் யமாஹி வின் புகழ்பெற்ற ஆர் சீரிஸ் வரிசையில் முற்றிலும் புதிய மற்றும் உலகளவில் முதன்முறையாக அறிமுகமாகும் ஒய் .இசட் .எஃப்ஆர் 2 மாடலை இந்திய யமாஹா மோட்டார் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

ரூ. 2,30,500 (எக்ஸ் ஷோரூம், டெல்லி) ஆரம்ப விலையில் அறிமுகமாகியுள்ள ஒய் .இசட் .எஃப்ஆர் 2 பிரீமியம் மோட்டார்சைக்கிள் வரிசையை விரிவுபடுத்துவதிலும், இந்திய ரைடர்களின் மாறி வரும் விருப்பங்களுக்கு ஏற்ற தயாரிப்புகளை வழங்குகிறது.

மிகவும் போட்டி நிறைந்த 200சி.சி பிரிவில் யமஹாவின் முதல் தயாரிப்பாக இந்த மாடல் விளங்குவதுடன் கிளீன் 'சூப்பர்ஸ்போர்ட்' செயல்திறன், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் அன்றாடப் பயன்பாட்டிற்கான வசதி ஆகியவற்றை விரும்பும் புதிய தலைமுறை ரைடர்களுக்காக இது உருவாக்கப்பட்டுள்ளது.

முற்றிலும் புதிய ஒய் .இசட் .எஃப்ஆர் 2 மூன்று வேரியண்ட்கள் மற்றும் ஐந்து தனித்துவமான வண்ணத் தேர்வுகளில் பேஸ் வேரியன்ட், மெட்டாலிக் பிளாக் மற்றும் டார்க் ப்ளூயிஷ் கிரே ஆகிய வண்ணங்களில் கிடைக்கும். க்விக் ஷிஃப்டருடன் கூடுதலாக, இது ஒரு பிரீமியம் 3டி எம்போஸ்டு சின்னம், ஃபாக்ஸ் ஸ்வேட் ஃபினிஷ் செய்யப்பட்ட இருக்கை, சில்வர் ஃபினிஷ் செய்யப்பட்ட ஸ்விங் ஆர்ம் மற்றும் யமஹாவின் முதன்மை மாடலான ஆர்1 ஹைகிளாஸ் ஃபினிஷை ஒத்த ஷாட்பிளாஸ்டு மஃப்ளர் எண்ட் கேப் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவை அதிக தனிப்பயனாக்கத்தையும் மேம்பட்ட ஓட்டுதல் அனுபவத்தையும் வழங்குகின்றன.

# விளாத்திகுளம் அருகே வைப்பார் தர்ஹாவில் வெகுவிமர்சையாக நடைபெற்ற சந்தனக்கூடு திருவிழா

விளாத்திகுளம் ஆகஸ்ட் 29.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகேயுள்ள புகழ்பெற்ற வைப்பார் மகான் செய்யது சமுசுதீன் ஷஹீது வலியுல்லா தர்ஹாவில் சந்தனக்கூடு திருவிழா வெகுவிமர்சையாக நடைபெற்றது. இதில் சாதி,மத பேதமின்றி அனைத்து மக்களும் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டவர்களுக்கு விபூதி பிரசதமாக வழங்கப்பட்டது. மேலும் மத நல்லிணக்கத்தினை வலியுறுத்தும் விதமாக நடைபெற்ற திருவிளக்கு பூஜையிலும் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு வணங்கினர். எம்மதமும் சம்மதம் என்பதற்கேற்ப மதநல்லிணக்கத்தை உணர்த்தும் வகையில், அனைத்து மதத்தினராலும் இந்த தர்ஹாவில் கோலாகலமாக கொண்டப்படும் இந்த விஷேச திருவிழாவில் பக்தர்களுக்கு, இந்து கோவில்களில் வழங்குவதைப் போல விபூதி மற்றும் பிரசாதங்கள் வழங்கப்படும் தனிச்சிறப்பினை இந்த கிராமத்திலுள்ள தர்கா பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ஏர்வாடி தர்ஹாவிற்கு அடுத்தபடியாக,



தென்தமிழகத்தில் பிரசித்தி பெற்ற இந்த தர்ஹாவில் நடைபெறும் சந்தனக்கூடு திருவிழாவிற்கு, தமிழகம் மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் வந்து செல்கின்றனர் என்பது சிறப்புடையதாக கருதப்படுகிறது.

விளாத்திகுளம் அருகே உள்ள வைப்பார் என்ற கிராமத்தில், பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த இந்த மகான் செய்யது சமுசுதீன் ஷஹீது வலியுல்லா தர்ஹா மற்றும் பள்ளிவாசல் அமைந்துள்ளது. பண்டைய பாண்டிய காலத்தில், ஹஜ்ரத் சம்சுதீன் ஷஹீது வலியுல்லா அன்ஹு,என்பவர் ஏர்வாடியைச் சேர்ந்த பாதுஷா சுல்தான் சையது இப்ராகிம் ஷஹீத்தின் இராணுவத்தில் போர்ப்படைதளபதியாக இருந்து பல போர்களில் வெற்றிவாகை சூடியுள்ளார். அப்போது, விளாத்திகுளம் அருகே உள்ள வைப்பாற்று படுகையோரம் அமைந்துள்ள கிராமமான இந்த வைப்பார் கிராமத்தில் நடந்தப் போரில் வீரமரணம் அடைந்துள்ளார். இவரது உடல் ஏர்வாடி தர்ஹாவிற்கு முன்பு அடக்கம் செய்யப்பட்டு, அடக்கஸ்தலம் அங்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இவர் போரில் இரத்தம் சிந்திய இடமான இக்கிராமத்தில், இவரின் நினைவாக இந்த தர்ஹாவானது, மிகவும் அழகான மற்றும் அமைதியான சூழலில் ஆன்மீக குணப்படுத்தும் மையமாக செயல்படுகிறது. மேலும் அனைத்து மத மக்களும் மதபேதமின்றி இங்கு வந்து ஆசிர்வாதம் பெறுகிறார்கள் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

# குமரியில் அனைத்து ரேஷன் கடைகளிலும் கைவிரல்,ரேகை பதிவு சிறப்பு முகாம்;இன்று நடக்கிறது

நாகர்கோவில், ஆக.29 கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் பிரதாப் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: குமரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகளில் இடம்பெற்றுள்ள அனைத்து பயனாளிகளின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் மின்னணு முறையில் உறுப்பினர்களின் அடையாளத்தை சரி பார்க்கும் பணி தீவிர படுத்தப்பட்டுள்ளது. அதன்படி குடும்ப அட்டை உறுப்பினர்கள் அனைவரும் எவ்வித தடைமின்றி நியாய விலைப் பொருள்களை தொடர்ந்து பெற்றிடும் பொருட்டு இதுவரை கைவிரல் பதிவு செய்யாதவர்கள் உடனடியாக தங்கள் பகுதியில் உள்ள நியாய விலை கடைகளுக்கு சென்று இப்பணியினை மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப அட்டை உறுப்பினர்கள் எவரேனும் வெளியூரில் வசித்தால் அவர்கள் தங்களின் மின்னணு குடும்ப அட்ட எண்ணை அருகில் உள்ள நியாய விலை கடைகளில் தெரிவித்து அங்கேயே கைவிரல் ரேகை பதிவுகளை செய்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. கைவிரல் ரேகை பதிவு செய்வதில் தொழில்நுட்ப சிக்கல்கள் ஏற்பட்டால், அதற்கு மாற்றாக கண் பதிவு முறையை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட முழுவதும் இந்த பணியினை நூறு விழுக்காடு முழுமையாக நிறைவு செய்ய ஆகஸ்ட் மாதம் 29ஆம் தேதி (இன்று) அனைத்து நியாய விலை கடைகளிலும் இதற்கான சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. எனவே இதுவரை இத்தகைய பதிவினை மேற்கொள்ளாத குடும்ப அட்டைதாரர்கள் இந்த சிறப்பு முகாமை பயன்படுத்தி தங்கள் குடும்ப உறுப்பினர்களின் கைவிரல் ரேகை அல்லது கண் பதிவினை தடை இன்றி செய்து முடிக்க வேண்டும். இவ்வாறு செய்தி குறிப்பில் கலெக்டர் தெரிவித்துள்ளார்.




கிருஷ்ணகிரி, கனக முட்டலு அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கள்ளச்சாராய தடுப்பு சட்டவிழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

# நித்திரவிளை அருகே மகனுக்கு அரசு வேலை வாங்கி தருவதாக பெண்ணிடம் ரூ.35 லட்சம் மோசடி; வாலிபர் மீது வழக்கு

நாகர்கோவில், ஆகஸ்ட். 29 நித்திரவிளை அருகே உள்ள ஆலங்கோடு பகுதியை சேர்ந்தவர் உஷா ராணி (52). இவரது கணவர் சார்லஸ் வெளிநாட்டில் உள்ளார். உஷாராணி வங்கி கணக்கு தொடர்பான நடவடிக்கைகளுக்காக செல்லும் போது வங்கிப் பெண் ஊழியர் ஒருவர் உஷாராணிக்கு அறிமுகம் ஆகியுள்ளார். அவர் மூலம் குழித்துறை பாளையம் கெட்டி என்ற இடத்தை சேர்ந்த ஜெனிஷ் என்பவரின் அறிமுகம் கிடைத்துள்ளது. ஜெனிஷ் பாகோடு பேரூராட்சியில் அரசு பணியில் இருப்பதாகவும், உஷாராணியிடம் உங்கள் மகனுக்கு அரசு வேலை வாங்கி தருவதாக கூறியுள்ளார்.

இதற்காக ரூ 35 லட்சம் செலவாகும் எனவும், முதலில் 10 லட்சம் ரூபாய் கொடுத்தால் போதும். பின்னர் வேலை கிடைத்த பின் மீதி பணத்தை கொடுங்கள் என கூறியுள்ளார். இதை நம்பிய உஷா ராணி முதலில் ரூ.10 லட்சம் ரொக்கமாக கொடுத்துள்ளார். பின்னர் மூன்று மாதங்களில் அரசு பணி கிடைத்துவிடும் என்று கூறியுள்ளார். ஆனால் ஜெனிஷ் வேலை எதுவும் வாங்கி கொடுக்கவில்லை.

இது குறித்து கேட்ட போது மேலும் ஐந்து லட்சம் ரூபாய், பத்து லட்சம் என கூடுதல் தொகையை கேட்டுள்ளார். அந்த பணத்தை வங்கி பரிவர்த்தனை மூலம் உஷாராணி வழங்கி உள்ளார். இவ்வாறாக மொத்தம் 35 லட்சம் ரூபாய் கொடுத்துள்ளார். ஆனால் பணத்தை வாங்கியவர் வேலை வாங்கி கொடுக்கவில்லை.

பின்னர் உறவினர்கள், வழக்கறிஞர்கள் வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தியதில் ரூ 8 லட்சம் மட்டும் ஜெனிஷ் திருப்பி கொடுத்துள்ளார். மீதி பணத்தை திருப்பிக் கொடுக்கவில்லை. இதனால் தன்னை ஏமாற்றிய ஜெனிஷ் மீது நடவடிக்கை கோரி மாவட்ட போலீஸ் எஸ் பி இடம் உஷாராணி புகார் அளித்தார். புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் விசாரணை நடத்த எஸ் பி உத்தரவிட்டார். அதன் பேரில் குற்ற பிரிவு போலீசார் விசாரணை நடத்தி ஜெனிஷ் மீது மோசடி உள்ளிட்ட பிரிவுகள் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

# கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் மாணவர் பேரவை தொடக்க விழா




கோவை ஆக:29 கோயம்புத்தூர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் மாணவர் பேரவை தொடக்க விழா,கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள தனலட்சுமி அம்மாள் பன்னோக்கு அரங்கில் நடைபெற்றது.

விழாவில் வீ த லீடர்ஸ் அமைப்பின் தலைமைத் தொண்டரும்,முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியுமான கே.அண்ணாமலை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர்,இன்றைய தலைமுறை இளைஞர்கள் விரைவான மாற்றத்தை எதிர்பார்ப்பதாகவும்,தற்போது பொறுப்பேற்றுள்ள மாணவர்கள் வெறும் தலைவர்கள் மட்டுமல்ல; கல்லூரியின் ஒட்டுமொத்த மாணவர்களின் பிரதிநிதிகள் என்றும் தெரிவித்தார்.கல்லூரிக் காலத்தில் மாணவர் தலைவர்களாக செயல்பட்ட பலர்,பின்னாளில் சிறந்த சமூகத் தலைவர்களாக உருவெடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இளைஞர்களுக்கு ஏற்படும் மனஅழுத்தம்,வேலைவாய்ப்பின்மை,புறக்கணிப்பு உள்ளிட்ட காரணங்கள் அவர்களை போதைப் பொருள் கலாச்சாரத்தை நோக்கி நகர்த்துவதாக தெரிவித்த அவர்,போதைப்பொருள் ஒழிப்புடன் மட்டும் நின்றுவிடாமல்,மாணவர்களை போதைப்பழக்கத்திற்கு தூண்டும் காரணங்களை முதலில் கண்டறிந்து அவற்றைத் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தினார்.

விழாவிற்கு கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி தலைமை வகித்தார்.கல்லூரி மேலாண்மைக்குழு பொருளாளர் ஓ.என். பரமசிவன் முன்னிலை வகித்தார்.முன்னதாக கல்லூரி முதல்வர் வே.சங்கீதா வரவேற்புரையாற்றினார்

மாணவர் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற மாணவர் தலைவர்,செயலர், துணைத்தலைவர்,இணைச்செயலர் மற்றும் விளையாட்டுத்துறைச் செயலர்கள் ஆகியோருக்கு அவர்களின் பெயர் மற்றும் பதவி பொறிக்கப்பட்ட வில்லைகளை சிறப்பு விருந்தினர் கே. அண்ணாமலை வழங்கினார். தொடர்ந்து,போதைப் பொருள் தவிர்ப்பு,பெண்களுக்கு எதிரான வன்கொடுமையில் ஈடுபடாமை,சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தேசப்பற்று ஆகியவற்றை வலியுறுத்தி மாணவர்கள் உறுதிமொழி ஏற்றனர்.விழாவின் நிறைவில்,மாணவர் பேரவைத் தலைவரும் முதுஅறிவியல் கணிதம் இரண்டாம் ஆண்டு மாணவியுமான செல்வி பி.சந்தியா நன்றியுரை யாற்றினார்.



# சேலம் மாநகராட்சியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்தார்

சேலம், ஆக.29: தமிழ்நாடு அரசின் சார்பில் சேலம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு செய்தார். கொண்டலாம்பட்டி மண்டலம் குமாரசாமிப்பட்டி அம்மா உணவகத்தில் சமையல் அறை, உணவின் தரம், விலை மற்றும் பொதுமக்கள் வருகை குறித்து ஆய்வு செய்தார். பொது மக்களிடம் உணவின் தரம் மற்றும் சுவை குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, ரூ.2.67 கோடி மதிப்பில் திருமணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் பாலம், அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.105.25 கோடி மதிப்பில் அமைக்கப்படும் கழிவுநீரேற்று நிலையம் மற்றும் நுண்ணுயிரி உரம் தயாரிப்பு மையம் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

சூரமங்கலம் மண்டலம் செவ்வாய்பேட்டையில் ரூ.46 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் கைவிடப்பட்ட மற்றும் காயமடைந்த விலங்குகளுக்கான பாதுகாப்பு மையத்தையும் பார்வையிட்டார்.

பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்குகொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# தென்காசி மாவட்டத்தில் இன்று ரேஷன் கடைகளில் சிறப்பு முகாம்

தென்காசி, ஆக.28: தென்காசி மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளில் eKYC பதிவு செய்யாத குடும்ப அட்டை பயனாளிகளுக்காக இன்று (ஆக.29) அனைத்து நியாய விலைக் கடைகளிலும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இதுவரை முன்னுரிமை குடும்ப அட்டைகளில் (PHH/AAY) 96.21 சதவீதமும், முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகளில் (NPHH) 87.89 சதவீதமும் eKYC பதிவு செய்யப்பட்டுள்ளது. eKYC பதிவை 100 சதவீதம் நிறைவு செய்யும் நோக்கில் நடைபெறும் இம்முகாமில், விடுபட்ட குடும்ப உறுப்பினர்கள் விற்பனை முனைய இயந்திரம் மூலம் கைவிரல் ரேகை அல்லது கருவிழி சரிபார்ப்பின் அடிப்படையில் eKYC பதிவு செய்து கொள்ளலாம்.

எனவே, இதுவரை eKYC பதிவு செய்யாத குடும்ப அட்டைதாரர்கள் இந்த சிறப்பு முகாமில் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., கேட்டுக் கொண்டுள்ளார்.

# மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

மதுரை, ஆக.28 இதர பிற்படுத்த ப்பட்டோர் (OBC), பொருளாதாரத்தில் பின்தங்கியோர் (EBC) மற்றும்சீர்மரபினர்(DNT) மாணவ, மாணவியர்களுக்கு ஒன்றிய அரசின் பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை திட்டம் (PM YASASVI) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

202627ஆம் கல்வியாண்டில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த தகுதியான மாணவர்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்தின் கீழ் 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு அதிகபட்சம் ரூ.75 ஆயிரமும், 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.1.25 லட்சம் வரையும் கல்வி மற்றும் விடுதிக் கட்டணமாக வழங்கப்படுகிறது. மொத்த உதவித்தொகையில் 30 சதவீதம் மாணவியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விண்ண ப்பதாரர்கள் OBC, EBC அல்லது DNT பிரிவைச் சேர்ந்தவர்களாகவும், குடும்பத்தின் மொத்த ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்துக்கு மிகாமலும் இருக்க வேண்டும். மேலும், 202526ஆம் கல்வியாண்டில் 100 சதவீத தேர்ச்சி பெற்ற, தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பள்ளிகளில் பயில்பவராக இருக்க வேண்டும்.

கடந்த கல்வியாண்டில் உதவித்தொகை பெற்ற மாணவர்கள், 202627ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் விண்ணப்பத்தை ஆகஸ்ட் 31க்குள் சமர்ப்பிக்க வேண்டும். பள்ளி தலைமை ஆசிரியர்கள் விண்ணப்பங்களை செப்டம்பர் 15க்குள் சரிபார்க்க வேண்டும்.

புதியதாக 9 மற்றும் 11ஆம் வகுப்பில் சேர்ந்து பயிலும் தகுதியான மாணவர்களுக்கான விண்ணப்ப தேதி பின்னர் அறிவிக்கப்படும். தகுதியுள்ள மாணவர்கள் இத்திட்டத்தில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., கேட்டுக்கொண்டுள்ளார்.




# கோவை ஈஷா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் ஓணம் திருவிழா



கோவை ஆக:29 ஓணம் பண்டிகை முடிந்த நிலையில், முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் விதமாக தற்போது ஓணம் விழா கொண்டாடப்பட்டதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.கேரள மாநிலத்தின் பாரம்பரிய பண்டிகையான ஓணம் 26ம் தேதி கோலகலமாக கொண்டாடப்பட்டது. கோவை மாவட்டம் கேரள மாநிலத்தை ஒட்டி அமைந்துள்ள நிலையில்,இங்குள்ள கல்வி நிறுவனங்கள் சார்பில் கடந்த ஒரு வாரமாகவே ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது.

இதனிடையே கேரளத்தை ஒட்டியுள்ள ஈசா கல்லூரியில் ஓணம் திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பொறியியல் கல்லூரி என்பதால் முதலாமாண்டு மாணவர்கள் தற்போது தான் வந்துள்ள நிலையில்,அவர்களை வரவேற்கும் விதமாக இன்று ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில் ஈஷா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி செயலர்டி.ஈ.அஜித்,தாளாளர் டி.ஈ.ஆதர்ஷ், தலைமை வகித்து விழா வைத் தொடங்கி வைக்க,ஓணம் பண்டிகை கொண்டாட்டம் கல்லூரி வளாகத்தில் களைக்கட்டியது.

மாணவ,மாணவிகள், கேரள மாநிலத்தின் பாரம்பரிய உடையணிந்து கல்லூரிக்கு வந்திருந்தனர். அப்போது மகாபலி மன்னரைப் போல் வேடமணிந்திருந்த மாணவர் செண்டைமேளம்முழங்க அழைத்து வரப்பட்டார். மாணவிகள், பேராசிரியைகள் கல்லூரி வளாகத்தில் இட்டிருந்த அழகியப் பூக்கோலத்தைப் பார்த்து மகிழ்ந்ததுடன்,மாணவிகளின் திருவாதிரைக்களி நடனத்தைக் கண்டு ரசித்த நிகழ்வு,ஓணம் பண்டிகையின் புராண நிகழ்வை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தியது.

மகாபலி மன்னரைப் போல் வேடமணிந்திருந்த மாணவருடன்மாணவர்கள் குழு புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். அதைத்தொடர்ந்து அனைவருக்கும் கேரளாவின் பாரம்பரிய சுவைமிக்க பாயாசம் வழங்கி,ஒருவருக்கொருவர் தங்களது மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்.

பின்னர்,அனைவருக்கும் ஓணம் சத்யா விருந்து பரிமாறப்பட்டது. அதைத்தொடர்ந்து மாணவ,மாணவிகளின் கண்கவர் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. இதனால் ஈசா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி வளாகமே விழாக்கோலத்தில் காட்சியளித்தது. மாணவ, மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள், ஊழியர்கள் காலை முதல் மாலை வரை ஓணம் பண்டிகை கொண்டாடி மகிழ்ந்தனர்.

# தருமபுரியில் ஸ்ரீ வேடியப்பன் சுவாமி கோயில் கும்பாபிஷேகம் விழா



தருமபுரி ஆகஸ்ட் 29 தருமபுரி புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வேடியப்பன் சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். கும்பாபிஷேக விழா கடந்த ஆகஸ்ட் 23ம் தேதி கொடியேற்றத்துடன் சிறப்பாக தொடங்கியது. இதனைத் தொடர்ந்து குமாரசாமிபேட்டையில் அமைந்துள்ள வன்னியர் மாரியம்மன் திருக்கோயிலில் இருந்து முளைப்பாரி மற்றும் புனித தீர்த்தக் குடங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, ஸ்ரீ வேடியப்பன் சுவாமி திருக்கோயிலில் சிறப்பாக கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. தொடர்ந்து ஆகஸ்ட் 26ம் தேதி புதன்கிழமை முதற்கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. இதில் விக்னேஸ்வர பூஜை, கணபதி பூஜை, மகாலட்சுமி பூஜை, வாஸ்து பூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து இரண்டாம் கால யாக சாலை பூஜைகளும், மாலை 5 மணியளவில் மூன்றாம் கால யாகசாலை பூஜைகளும் பக்தி பரவசத்துடன் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக ஆகஸ்ட் 28 ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் நான்காம் கால யாக சாலை பூஜைகள் நடைபெற்றது . யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித தீர்த்தக் குடங்கள் மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் கோயில் கோபுர கலசத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, வேத மந்திரங்கள் முழங்க புனித தீர்த்தம் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது. அப்போது கோயிலில் திரண்டிருந்த பக்தர்கள் பக்தி கோஷங்களை எழுப்பி சுவாமியை வழிபட்டனர். தொடர்ந்து பக்தர்கள் மீது புனித தீர்த்தம் தெளிக்கப்பட்டது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அருள்மிகு ஸ்ரீ வேடியப்பன் சாமிக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது. பின்னர் சிறப்பு அலங்காரத்தில் சுவாமி பக்தர்களுக்கு காட்சியளித்தார். கும்பாபிஷேக விழாவையொட்டி கோவில் முழுவதும் விழா கோலமாக காட்சியளித்தது. சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு நீண்ட வரிசையில் காத்திருந்து ஸ்ரீ வேடியப்பனை தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து திருக்கோவில் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் மற்றும் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# தூய நெஞ்சக் கல்லூரி முதுகலை கணினி அறிவியல் துறை சார்பில் இரு நாள் சமூக விரிவாக்க நிகழ்ச்சி



திருப்பத்தூர்:ஆக:29 திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி( தன்னாட்சி) முதுகலை கணினி அறிவியல் துறை சார்பாக ஆகஸ்ட் 27, 28 ஆகிய இரு நாட்களில் சமூக விரிவாக்க நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியை துறைத் தலைவர் முனைவர் ம. பூவிழி, சமூக விரிவாக்க பொறுப்பாசிரியர் முனைவர் ஆ. மேகலா, உதவிப் பேராசிரியர் தே. கஜலட்சுமி ஆகியோர் தொடங்கி வைத்தனர். முதல் நாள் (27.08.2026) –அரசு உயர்நிலைப் பள்ளி, பெருமாப்பட்டு முதல் நாளில், பெருமாப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு முதுகலை கணினி அறிவியல் துறை மாணவர்கள் விழிப்புணர்வுநிகழ்ச்சியை நடத்தினர். கல்வியின் முக்கியத்துவம், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு, ஆரோக்கியமான உணவுப் பழக்கம்,

கைபேசி பயன்பாடு மற்றும் சமூக ஊடக விழிப்புணர்வு ஆகிய தலைப்புகளில் நாடகம், பேச்சு, பாடல் மற்றும் செயல்பாடுகள் மூலம் மாணவர்கள் விளக்கினர். பள்ளி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று நன்மதிப்பு பெற்றனர்.

இரண்டாம் நாள் (28.08.2026) – பெருமாப்பட்டு கிராமம் இரண்டாம் நாளில் பெருமாப்பட்டு கிராம மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியை மல்லிகா தேவராஜ் (ஊராட்சி மன்றத் தலைவர்), அருள்(ஊராட்சி செயலாளர்), மக்கள் பழனி (மக்கள் நல பணியாளர்) மற்றும் ராஜேஷ் (இளைஞரணி தலைவர்) ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் முனைவர் ம. பூவிழி, துறைத் தலைவர், சமூக விரிவாக்க பொறுப்பாசிரியர் முனைவர் ஆ. மேகலா மற்றும் உதவிப் பேராசிரியர் தே. கஜலட்சுமி ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்நிகழ்வில் கல்வியின் முக்கியத்துவம், ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கங்கள், வேளாண்மை மற்றும் கல்விக்கான மத்திய அரசு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் மரம் நடும் இயக்கம் ஆகியவை மாணவர்களால் கிராம மக்களுக்கு விளக்கப்பட்டன. கிராம மக்கள் இந்நிகழ்ச்சியை பாராட்டி, மாணவர்களின் சமூகப் பணியைப் பாராட்டினர். இரு நாள் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.